ET/SSS/2022(2023)/OL/62/T/Q/S-3

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

G. C. E. Ordinary Level | க.பொ.த. சாதாரண தரம் | 2022 (2023)

# Student Seminar Series

## மாணவர் கருத்தரங்கு தொடர்

Practice Paper - முன்னோடி வினாப்பத்திரம்

# History

# வரலாறு



**Question Paper - I, II** | வினாப்பத்திரம் - I, II (மொழிமூலம்–தமிழ்)

Nenasa
The National e-learning Portal for The General Education

தொலைக்கல்வி மேம்பாட்டு பிரிவு | தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு

අධ්‍යාපන ප්‍රවර්ධන ශාඛාව ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
**Ministry of Education, Sri Lanka**

| 33 | T | I |
|---|---|---|

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - ශිෂ්‍ය සම්මන්ත්‍රණ මාලාව - 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை- மாணவர் கருத்தரங்கு தொடர்- 2022 (2023)
**G. C. E. Ordinary Level Examination – Student Seminar Series - 2022 (2023)**

ඉතිහාසය I
*வரலாறு* I
History I

*ஒரு மணித்தியாலம்*

**வரலாறு I**

கவனிக்க

- எல்லா வினாக்களுக்கும் விடையெழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் உமது விடைக்குரிய இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

1. இலங்கையில் மகாசேன மன்னனின் ஆட்சிக் கால முடிவு வரையிலான இந்நாட்டின் வரலாற்றுத் தகவல்களை அறியக் கூடிய இலக்கிய மூலாதாரம்.
   1. மகாவம்சம் 2. பூஜாவலிய 3. தூபவம்சம் 4. தீபவம்சம்

2. தனக்கு உதவி செய்த அதிகாரிக்கு நன்றிக் கடனாக வழங்கப்பட்ட பரிசில்கள், சலுகைகள் பற்றிக் குறிப்பிடும் முதலாம் விஜயபாகு மன்னனால் எழுதப்பட்ட சாசனம்
   1. வல்லிபுர பொற்சாசனம் 2. கல்பொத்த கல்வெட்டு.
   3. பதுளைதூண் கல்வெட்டு. 4. பனாகடுவ செப்பு சாசனம்

3. இலங்கையின் பண்டைய கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள புராதன பிரதேச எல்லைகளின் குறியீடுகளை மாத்திரம் கொண்ட விடைத் தொகுதி
   1. விசிறி, பாதச்சுவடு, சங்கு
   2. மாட்டுக்கொம்பு, அம்பு, செங்கோல்
   3. அன்னம், செங்கோல், விசிறி
   4. கொடி, பாதச்சுவடு, ஈட்டி

4. கீழே தரப்பட்டுள்ள இடங்களுள் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த தாழ்நில ஈரவலய குகையாக அமைவது
   1. மினிஹாகல்கந்த
   2. பத்திராஜவெல
   3. படதொம்பலெனா.
   4. பெல்லன்பதிபெலஸ்ஸ

5. பின்வருவனவற்றுள் ஆரம்ப இரும்பு யுகம் எனக் குறிப்பிடப்படும் காலப்பகுதி
   1. வரலாற்றுக்கு முற்பட்ட காலம்
   2. முன் வரலாற்றுக் காலம்
   3. வரலாற்றுக் காலம்
   4. ஆரம்ப வரலாற்றுக் காலம்

6. தாழ்நில ஈரவலயத்தில் வாழ்ந்த கற்கால மனிதர்கள் அதிகமாக உட்கொண்ட உணவு வகை
   1 .காட்டுப் பலா 2. நன்னீர் மீனினங்கள் 3. காட்டு வாழை 4. நத்தைகள்.

7. இலங்கையில் களிமண் ஓடக் கல்லறை மயானம் கண்டுபிடிக்கப்பட்ட இடம் பின்வருவனவற்றுள் எது?
   1. இப்பன்கடுவ
   2. ரஞ்சாமடம
   3. யடிகல்பொத்த
   4. கல்சொஹுன் மயானம்

8. கீழே A, B நிரல்களை மிகச் சரியாக தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடையாக அமைவது

| A. | B. |
|---|---|
| 1. தச்சர் வாழும் கிராமம் | A. கும்பகார காம |
| 2. விவசாயிகள் வாழும் கிராமம் | B. வட்டகீ காம |
| 3. மீனவர் வாழும் கிராமம். | C. கசீகார காம |
| | D. கேவட்ட காம |

1. ABD 2. ACD 3. BCD 4. BCA

9. **மாத்தளை எம்புல் அம்பே** கல்வெட்டில் பிராந்திய நிர்வாகி எப்பெயரில் குறிப்பிடப்படுகின்றார்
   1. பருமக 2. மபுறுமுகா 3. துகதரஜ 4. போசனி அரசன்

10. அநுராதபுர பிரதேச மக்கள் சில காலம் கைவிடப்பட்டு மீண்டும் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்பட்ட சேனையை எவ்வாறு அழைத்தனர்?
   1. கனத்த 2. பிடபிம் 3. சேன் 4. செஹென்

11. பசுக்களின் பாதுகாப்பின் பொருட்டு செய்யப்படுகின்ற பால்மடுயாகம் தற்காலத்திலும் நடைபெறும் மாகாணங்களாவன.
   1. மேல் மாகாணம், மத்திய மாகாணம்
   2. சப்ரகமுவ, ஊவா மாகாணம்
   3. சப்ரகமுவ, மேல் மாகாணம்
   4. ஊவா, தென் மாகாணம்

12. கம்பளை இராசதானி காலத்தில் இந்நாட்டுக்கு வருகை தந்த செங்கோ எனும் தளபதியால் பொறிக்கப்பட்ட மும்மொழிக் கல்வெட்டில் காணப்படும் மும்மொழிகளும் எவை?
   1. சீனம், பாரசீகம், சிங்களம் 2. சீனம், தமிழ், ஆங்கிலம்
   3. சீனம், பாரசீகம், தமிழ் 4. சீனம், அரேபிய, யப்பான்.

13. கம்பளை இராசதானி காலத்தில் எழுதப்பட்ட தூது காவியங்கள் இரண்டு.
   1. செலலிகினி சந்தேசய, மயுர சந்தேசய 2. திசர சந்தேசய, கிரா சந்தேசய
   3. கிரா சந்தேசய, மயுர சந்தேசய 4. மயுர சந்தேசய, திசர சந்தேசய.

14. இப்ன் பதூதா எனும் அரேபிய தேசசஞ்சாரி இந்நாட்டுக்கு வருகை தந்தபோது நிலவிய இராசதானி
   1. அநுராதபுரம் 2. பொலன்னறுவை 3. தம்பதெனிய 4. கம்பளை

15. ஒல்லாந்தருடன் உடன்படிக்கை செய்து போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து வெளியேற்றிய மன்னன்.
   1. முதலாம் விமலதர்மசூரியன் 2. இரண்டாம் இராஜசிங்க மன்னன்.
   3. செனரத் மன்னன் 4. இரண்டாம் விமலதர்மசூரிய மன்னன்.

கீழே தரப்பட்டுள்ள அட்டவணையைப் பயன்படுத்தி 16,17,18 ஆம் வினாக்களுக்கு விடை தருக

| | மன்னர்கள் | | அரசானாவதற்கு முன்னரான இயற் பெயர் | | போர் நடை பெற்ற இடம் |
|---|---|---|---|---|---|
| A | 1 ஆம் இராஜசிங்கன் | D | மகா ஆஸ்தான குமாரன் | G | கன்னொறுவ |
| B | 1 ஆம் விமலதர்மசூரியன் | E | டிகிரி இளவரசன் | H | முல்லேரியா |
| C | 2ஆம் இராஜசிங்கன் | F | கோணப்பு பண்டார | I | தந்துரே |

16. கி.பி 1638 போரில் கொல்லப்பட்ட போர்த்துக்கேய தளபதி தியோகு த மெல்லோவுடன் தொடர்புடைய விடைத் தொகுதி
    1. ADH 2. AFH 3. CDG 4. CDI

17. கி.பி 1594 இல் குசுமாசன தேவியை அரசியாக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட போருடன் தொடர்புடைய விடைத் தொகுதி
    1. AFI 2. BFI 3. BFG 4. CFH

18. போர்த்துக்கேயர் ஆசியாவில் அடைந்த படுதோல்வியை தழுவிய போருடன் தொடர்புடைய விடைத் தொகுதி
    1. AEH 2. AEI 3. BEI 4. CDG

19. மறுமலர்ச்சிக்காலத்தில் மைக்கல் அஞ்சலோ பிரசித்தம் பெற்று விளங்கிய துறையாக அமைவது
    1. சிற்பக் கலை 2. இலக்கியம் 3. நாடுகாண் பயணம் 4. வைத்திய விஞ்ஞானம்

20. நாடுகாண் பயணங்களில் முதன் முதலில் ஈடுபட்ட இரு நாடுகளும் எவை?
    1. பிரான்ஸ், போர்த்துக்கல் 2. இங்கிலாந்து, ஸ்பானியா
    3. போர்த்துக்கல், ஸ்பானியா 4. பிரான்ஸ், இங்கிலாந்து.

21. "கிறிஸ்தவர்களையும் வாசனைத் திரவியங்களையும் தேடி வந்தோம்" என்ற கூற்றுடன் தொடர்புடைய கள்ளிக் கோட்டையில் வந்திறங்கிய நாடுகாண் பயணி
    1. அமெரிக்கோ வெஸ்புசி 2. பேர்டினன் மகலன்
    3. வாஸ்கொடகாமா 4. பர்த்தலோமியோ டயஸ்

22. கைத்தொழிற் புரட்சி காலத்தில் இங்கிலாந்தில் தொடர்பாடல் துறை வளர்ச்சியடைவதில் செல்வாக்குச் செலுத்திய பிரதான காரணி.
    1. குதிரை வண்டி மூலமான தபால் சேவை ஆரம்பம்.
    2. அலெக்சாண்டர் கிரகம்பெல் தொலைபேசியை கண்டுபிடித்தமை
    3. மக்கடம் முறை அறிமுகம்
    4. புகையிரத, பெருந்தெருக்களின் விருத்தி

23. 1948 இல் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த பின் ஆரம்பிக்கப்பட்ட விவசாயக் குடியேற்றங்கள் பின்வருவனவற்றுள் எவை?
    1. கந்தளாய், ரிதிபெந்தி அணை, பத்மடில்ல, தேவஹூவ
    2. தேவஹூவ, காகம, பராக்கிரமசமுத்திரம், மின்னேரியா
    3. கந்தளாய், காகம, பெரகம, இரணைமடு.
    4. கிரிதலை, கந்தளாய், பத்மடில்ல, சொரபொரவாவி

24. திருகோணமலைத் துறைமுகத்தின் மீது ஆங்கிலேயரின் கவனம் ஈர்க்கப்பட்டமைக்கான காரணம்
    1. தென் மேல் பருவக் காற்றுக் காலங்களில் கப்பல்களைப் பாதுகாத்து கொள்ளல்.
    2. இந்தியாவின் மேற்குக் கரையோரத்தில் ஆங்கிலேயரின் கடற் படைப் பலத்தைப் பாதுகாத்துக் கொள்ளல்.
    3. வடகீழ் பருவக் காற்றுக் காலங்களில் கப்பல்களைப் பாதுகாத்துக் கொள்ளல்.
    4. இந்தியாவின் வடமேற்கு பிரதேசங்களிலுள்ள துறைமுகங்களைப் பாதுகாத்துக் கொள்ளல்

25. மியூரன் குழுவின் சிபாரிசுகளுள் ஒன்று.
    1. வரி வசூலிப்பதற்கும், நீதி வழங்குவதற்கும் என வெவ்வேறான உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படல்
    2. தெங்கு வரி தவிர்ந்த புதிய வரிகள் நீக்கப்படல்.
    3. வரி வசூலிப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு உத்தியோகத்தர்களை தொடர்ந்தும் அப்பணியில் ஈடுபடுத்துதல்.
    4. ஒல்லாந்தரின் நீதிமன்ற முறையை நீக்குதல்.

- 26, 27ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு A - L வரையான தகவல்களைப் பயன்படுத்துக

| போராட்டத்திற்கான காரணங்கள் | போராட்டத் தலைவர்கள். | ஆளுநர்கள். |
|---|---|---|
| A. புதிய நீதிமன்ற முறை | E. வாரியபொல ஸ்ரீ சுமங்கல தேரர் | I. ஹர்கியூலிஸ் றொபின்சன். |
| B. மலைநாட்டு பிரதானிகளுக்கு ஏற்பட்ட தாக்கம் | F. கெப்படிபொல திசாவ | J. டொரிங்டன் |
| C. கிராம சபைகள் செயலற்றுப் போதல் | G. மொல்லிகொட நிலமே | K. றொபட் பிறௌன்றிக். |
| D. சுதந்திரத்தை இழந்தமையும், அரசன் இல்லாமை பற்றிய மனவேதனையும் | H. கொங்காலேகொட பண்டா. | L. வில்லியம் கிரகெரி |

26. கி.பி 1818 சுதந்திரப் போராட்டம் தொடர்பான விடயங்களை மாத்திரம் கொண்ட விடைத் தொகுதி
    1. AHK  2. BFK  3. CEJ  4. DHL

27. கி.பி 1848 சுதந்திரப் போராட்டம் தொடர்பான விடயங்களை மாத்திரம் கொண்ட விடைத் தொகுதி
    1. AJL  2. AHJ  3. BCK  4. BFI

28. 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்நாட்டின் நகர்ப்புற மற்றும் தோட்டத் தொழிலாளர்களின் தொழிற்சங்க உரிமைகளை வென்றெடுப்பதற்கு தலைமைத்துவம் வகித்த தலைவர்கள்.
    1. கோ.நடேச ஐயர், எஸ்.ஏ விக்கிரமசிங்க
    2. ஜேம்ஸ் பீரிஸ், கோ.நடேச ஐயர்
    3. ஏ.ஈ குணசிங்க, பொன்னம்பலம் இராமநாதன்.
    4. ஏ.ஈ குணசிங்க, கோ.நடேச ஐயர்

29. மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் முதற் கட்டமாக அமைவது
    1. பொல்கொல்ல அணை நிர்மாணம்.
    2. கல்லோயா அபிவிருத்தித் திட்டம்.
    3. விக்டோரியா நீர்த்தேக்கம் உருவாக்கம்.
    4. போவத்தன்ன நீர்த்தேக்கம் உருவாக்கம்.

30. உதயபானு பத்திரிகை மற்றும் சைவ ஆங்கிலப் பாடசாலை ஆரம்பித்தலுடன் தொடர்புடைய நபர்.
    1. சித்திலெப்பை  2. ஆறுமுக நாவலர்
    3. பொன்னம்பலம் அருணாச்சலம்  4. பொன்னம்பலம் இராமாதன்

31. பிரித்தானியராட்சியின் கீழ் இலங்கை அரசியலில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு ஏற்ப நிரல் i, நிரல் ii இனை தொடர்புபடுத்தும் போது வரும் சரியான விடை

| நிரல் 1 | நிரல்11 |
|---|---|
| 1. கோல்புறூக் சீர்திருத்தம். | A. முதல் தடவையாக வரையறுக்கப்பட்ட வாக்குரிமை மூலம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படல். |
| 2. குறூ மக்கலம் சீர்திருத்தம் | B. சட்டவாக்கக் கழகத்தில் உத்தியோக சார்பற்றோர் பெரும்பான்மையாக இருந்தமை. |
| 3. மனிங் சீர்திருத்தம் | C. இனவாரிப் பிரதிநிதித்துவ முறை நீக்கப்பட்டமை |
| 4. டொனமூர் சீர்திருத்தம் | D. அரசின் வர்த்தக ஏகபோக உரிமை நீக்கப்பட்டமை. |

1. ACBE  2. BAED  3. CADB  4. DABC

32. இலங்கையில் தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமையப் பெற்றுள்ள இடம் பின்வருவனவற்றுள் எது?
    1. தலவாக்கலை  2. அகலவத்தை  3. லுணுவில  4. பத்தலகொட.

- கீழே ABCD என தரப்பட்டுள்ள கூற்று சோடிகளைப் பரிசீலித்து 33 - 36 வரையான வினாக்களுக்கு விடை தருக

    A. 1. சோல்பரி அரசியல் யாப்பு சீர்திருத்தம்
       2. முதலாம் குடியரசு யாப்பு

    B. 1. எளிய பெரும்பான்மை பிரதிநிதித்துவம்.
       2. ஓம்பூட்ஸ்மன் நியமனம்

    C. 1. சூழல் மாசடைதல்
       2. கைத்தொழில்மயமாக்கம்

    D. 1. உலகில் முதலாவது எழுதப்பட்ட சமஷ்டி யாப்பு
       2. அமெரிக்க சுதந்திரப் போர்

33. முதலாவதன் குறைபாட்டால் இரண்டாவது தோற்றம் பெற்றதை காட்டும் சோடி
    1. A  2. B  3. C  4. D

34. இரண்டாவதன் தோற்றத்தால் முதலாவது அதிகரித்தமையைக் காட்டும் சோடி.
    2. A  2. B  3. C  4. D

35. இரண்டாவதன் விளைவாக முதலாவது தோற்றம் பெற்றதைக் காட்டுப் சோடி.
    1. A  2. B  3. C  4. D

36. முதலாவதற்கும் இரண்டாவதற்கும் இடையே எவ்வித தொடர்பினையும் காட்டாத சோடி.
    1.A  2. B  3. C  4. D.

37. 1917 மார்ச் மாதப் புரட்சியின் காரணமாக ரஷ்யாவின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய கிளர்ச்சித் தலைவர்.
    1. கெரென்ஸ்கி  2. வி.ஐ லெனின்  3. ஜோசப் ஸ்டாலின்  4. லியொன் ட்ரொஸ்கி

- கீழே ABC எனத் தரப்பட்டுள்ள விடயங்களைக் கொண்டு 38 ஆம் வினாவிற்கு விடையளிக்குக

    A. கம்பியூனிச வாதம்
    B. பாசிசவாதம்
    C. லிபரல் வாதம்

38. இத்தாலியில் முசோலினியுடன் தொடர்புடைய விடயம்
    1. ABC உண்மையானவை
    2. A யும் C யும் உண்மையற்றவை B உண்மையானது.
    3. ABC உண்மையற்றவை
    4. A யும் C யும் உண்மையானவை B உண்மையற்றது.

39. ஐக்கிய நாடுகள் சபையில் நிரந்தர உறுப்புரிமை கொண்ட நாடுகளை மாத்திரம் காட்டும் விடைத் தொகுதி
    1. ஐக்கிய அமெரிக்கா, பெரிய பிரித்தானியா, சோவியத் ரஷ்யா, பிரான்ஸ், சீனா
    2. ஜேர்மன், ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ரஷ்யா சீனா, பெரிய பிரித்தானியா.
    3. ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ரஷ்யா, சீனா, பெரிய பிரித்தானியா, இந்தியா
    4. ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ரஷ்யா, சீனா, பெரிய பிரித்தானியா, யப்பான்.

40. இரண்டாம் உலகமகா யுத்தத்தின் பின் தமது அரசியல் முகாம்களை வெற்றிபெறச் செய்வதற்காக பல்வேறு உபாயங்களைக் கையாண்ட இரு நாடுகளும் எவை?
    1. ஜேர்மனி, இத்தாலி  2. ஜேர்மனி, ஐக்கிய அமெரிக்கா
    3. ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா  4. ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா

*****

දූරස්ථ අධ්‍යාපන ප්‍රවර්ධන ශාඛාව ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව

අධ්‍යාපන අමාත්‍යාංශය

கல்வி அமைச்சு

**Ministry of Education, Sri Lanka**

| 33 | T | II |
|---|---|---|

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - ශිෂ්‍ය සම්මන්ත්‍රණ මාලාව - 2022 (2023)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை- மாணவர் கருத்தரங்கு தொடர் - 2022 (2023)

**G. C. E. Ordinary Level Examination – Student Seminar Series - 2022 (2023)**

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි.

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்

Additional Reading Time – 10 minutes

*வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.*

**வரலாறு II** **நேரம்: 3 மணித்தியாலம்**

- பகுதி – I இல் முதலாம் வினா கட்டாயமானது
- பகுதி – II இல் நான்கு வினாக்களுக்கும், பகுதி III இல் ஒரு வினாவிற்கும் விடையளிக்குக
- எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடையளிக்குக.

## பகுதி I

1. அ) (i) கீழே தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

**ஜம்புகோளப்பட்டினம், ஊராத்தோட்டை, மன்னார் தீவு, புத்தளம், கோகர்ண, கால்க நதி, கண்டி, சொரபொர வாவி, மாதுறு ஓயா நீர்த்தேக்கம், கப்பரகந்த நதி, பூந்தல, கொழும்பு.** (புள்ளிகள் 12)

(ii) கீழே தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் உலகப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக

**பிலிப்பைன்ஸ் தீவு, பத்தேவியா, மலாக்கா நீரிணை, சுயெஸ் கால்வாய், கொன்ஸ்தாந்து நோபிள், இத்தாலி** (புள்ளிகள் 6)

ஆ) (i) கீழே ABCD எனத் தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை ஒழுங்கு முறைப்படி எழுதுக

A. ஸ்பானிய மன்னன் பேர்டினன்ட் அவனது மனைவி இஸபெல்லா ஆகியோரின் அனுசரனையுடன் மேற்கிந்திய தீவுகளைக் கண்டுபிடித்த நாடுகாண் பயணி


B. ஸ்ரீ விஜயராஜசிங்க மன்னனுடன் ஆரம்பமான புதிய அரச வம்சம்

C. உரிய காலத்தில் அறுவடை செய்யத் தவறும் நபர்களுக்கு தண்டனை வழங்குதல் பற்றி குறிப்பிடும் கல்வெட்டு

D. அமெரிக்க சுதந்திரப் போருக்கான உடனடிக் காரணம் (புள்ளிகள் 4)

- உரு A, B என்பவற்றில் தரப்பட்டுள்ள படங்களை அவதானித்து கீழ் வரும் வினாக்களுக்குரிய விடைகளை வினா இலக்க ஒழுங்கு முறைப்படி எழுதுக

படம் A



ii) 1. A படத்தின் மூலம் காட்டப்பட்டுள்ள நிர்மாணம் எதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது?

2. இதில் மண் குழாய்கள் பொருத்தப்பட்டிருந்தமைக்கான காரணம் யாது?

3. இங்கு எரியூட்டுவதற்குத் தேவையான கரியினை பெற்றுக் கொள்ள பயன்படுத்தப்பட்ட தாவர வகை யாது?

4. இந்நிர்மாணம் காணப்படும் இடமொன்றினைக் குறிப்பிடுக

(புள்ளிகள் 4)

படம் B



1. B படத்தின் மூலம் காட்டப்பட்டுள்ள நிறுவனத்தின் பெயர் யாது?
2. இதன் தலைவர் யார்?
3. இவரை நியமனம் செய்பவர் யார்?
4. இந்த நிறுவனத்தின் கீழ் செயற்படும் நீதிமன்றத்தைக் குறிப்பிடுக?

(புள்ளிகள் 4)

## பகுதி - II

2. i. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த கரையோர வெட்டவெளிகள் மூன்றினைக் குறிப்பிடுக? (புள்ளிகள் 3)
   ii. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் தனது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து கொண்ட முறைகள் இரண்டினைக் குறிப்பிடுக (புள்ளிகள் 4)
   iii. ஆரம்ப வரலாற்றுக் கால பண்டைய குடியிருப்புக்களின் பரம்பலில் செல்வாக்குச் செலுத்திய பிரதான காரணிகள் இரண்டினை குறிப்பிட்டு விளக்குக? (புள்ளிகள் 5)
   iv. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் மரணச் சடங்கு முறையினை மூன்று உதாரணங்கள் மூலம் விளக்குக? (புள்ளிகள் 6)

3. i. கமிகவின் பணிகள் மூன்றினைக் குறிப்பிடுக? (புள்ளிகள் 3)
   ii. இலங்கையில் பன்முகப்படுத்தப்பட்டிருந்த அதிகாரத்தினை மத்தியமயப்படுத்துவதற்கான பின்வரும் செயற்பாடுகளை மேற்கொண்ட ஆட்சியாளர்களைக் குறிப்பிடுக?
      A. முதன் முதலாக முழு இலங்கையையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவந்தவர்
      B. முதலாவதாக அநுராதபுரத்தை திட்டமிட்ட நகரமாக்கியவர்.
      C. மௌரிய வம்ச மரபுப்படி பஞ்ச வஸ்துக்களைப் பயன்படுத்தி இரண்டாம் முறையாக முடி சூடிக் கொண்டவர்.
      D. யாழ்ப்பாண பிரதேசத்திற்கு ரிஷிகிரி எனும் அமைச்சனை நியமித்தவர்

      (புள்ளிகள் 4)
   iii. வசப மன்னனின் ஆட்சிக் கால முக்கியத்துவத்தினை இரு காரணிகளினூடாக விளக்குக? (புள்ளிகள் 5)
   iv. பொலன்னறுவை இராசதானியின் வீழ்ச்சிக்கான காரணிகள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக? (புள்ளிகள் 6)

4. i. கீழே தரப்பட்டுள்ள ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் அமையப் பெற்றிருந்த நிர்வாக மையங்களை ABC ஒழுங்கில் குறிப்பிடுக?
      A. கிரிந்தி ஓயா.
      B. மல்வத்து ஓயா.
      C. மகாவலி கங்கை. (புள்ளிகள் 3)
   ii. கீழே ABCD எனத் தரப்பட்டுள்ள பண்டைய தொழினுட்பத்துடன் தொடர்புடைய ஆக்கங்கள் எவை என்பதை அடைப்புக்குள்ளிருந்து தெரிந்தெடுத்து ஒழுங்கு முறைப்படி எழுதுக.
      A. மட்பாண்ட உற்பத்திக்குப் பயன்படுத்திய தொழினுட்ப உபகரணம்.
      B. அமுக்கப் பிரயோகத்தைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட உபகரண வகை
      C. நீரலைகளினால் எற்படும் பாதிப்பினால் குளக்கட்டு அரிப்புறுவதை தடுப்பதற்காக உருவாக்கப்பட்ட குளத்தின் உறுப்பு
      D. ருவன்வெளிசாயாவை இடிமின்னல் தாக்கத்திலிருந்து பாதுகாக்க பொருத்தப்பட்ட உபகரணம்

      **(வஜ்ரசும்பட்ட, கேத்திரகணித கல்லாயுதம், மடைக்கதவு, அலைதாங்கி, வனைதல் சில்லு, கற்பீலி, வெளிவான் கதவு, போதிமனை)** (புள்ளிகள் 4)

   iii. புராதன இலங்கையில் மகாவாவிகள் அமைக்கப்பட்டதற்கான நோக்கங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக? (புள்ளிகள் 5)

iv. A - அலைதாங்கி
B - மடைக்கதவு
C - கலிங்கல் தொட்டி
D - குளக்கட்டு
மேலே தரப்பட்ட குளத்தின் உறுப்புக்களில் இரண்டின் அமைப்பையும், அவற்றின் தொழிற்பாடுகளையும் சுருக்கமாக விளக்குக (புள்ளிகள் 6)

5. i. பின்வரும் சந்தர்ப்பங்களில் அயல் நாடுகளுடன் அந்நியோன்னியத் தொடர்புகளை மேற்கொண்ட அரசர்களின் பெயர்களை ABC ஒழுங்கில் எழுதுக
A - கண்ணாடி மணிகளைப் பெற்றுவர உரோம் நாட்டிற்கு தூதுக்குழுவை அனுப்பியமை.
B - பத்தினிதெய்வ கோயில் திறப்பு விழாவிற்கு இந்தியாவிற்கு சென்றமை
C - இருபது முறை சீனாவிற்கு தூதுவர்களை அனுப்பியமை (புள்ளிகள் 3)

ii. கீழே தரப்பட்டுள்ள கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள கைத்தொழில்களை ABCD ஒழுங்கில் எழுதுக
A. முதுகல்ல கல்வெட்டு
B. மண்டகல கல்வெட்டு
C. வெஹெரக்கம கல்வெட்டு
D. வேகிரிய கல்வெட்டு (புள்ளிகள் 4)

iii. பௌத்த சமயம் இந்நாட்டில் வேரூண்டியதைத் தொடர்ந்து அநுராதபுர யுகத்தில் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட விதத்தினை இரண்டு காரணிகளுடாக விளக்குக? (புள்ளிகள் 5)

iv. புராதன இலங்கையர் இன நல்லிணக்கத்துடன் வாழ்ந்தமையை மூன்று உதாரணங்களின் மூலம் விளக்குக (புள்ளிகள் 6)

6) i. கீழே தரப்பட்டுள்ள தகவல்களுடன் தொடர்புடைய விடைகளை ABC என்ற ஒழுங்கில் எழுதுக
A. யாழ்ப்பாண இராசதானியை ஆட்சி செய்த அரச வம்சம்.
B. குருநாகல் இராசதானியின் ஆரம்ப ஆட்சியாளன்
C. கோட்டை இராசதானி காலத்தில் இடம்பெற்ற சிங்கள சங்கய எனும் கிளர்ச்சியின் போது கைது செய்யப்பட்ட தலைவர் (புள்ளிகள் 3)

ii. ஆறாம் பரக்கிரமபாகு மன்னன் சிரேஷ்ட ஆட்சியாளனாக விளங்கியமைக்கு ஏதுவான இரண்டு காரணிகளைக் குறிப்பிடுக (புள்ளிகள் 4)

iii. இரண்டாம் இராஜசிங்க மன்னன் எதிர்நோக்கிய சவால்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக? (புள்ளிகள் 5)

iv. கண்டி இராசதானியின் நிர்வாக கட்டமைப்பு ஒழுங்கமைக்கப்பட்டிருந்த முறையினை மூன்று காரணிகளினூடாக விளக்குக? (புள்ளிகள் 6)

7) i. A. 1833 அரசியல் யாப்பு சீர்திருத்தம் தொடர்பில் ஆலோசனைகளை முன்வைப்பதற்காக வருகை தந்த இரு நபர்கள்
B. இலங்கையர் சங்கத்தை ஆரம்பிப்பதற்கு காரணகர்த்தாவாக இருந்த ஐரோப்பியர் ஆகியோரை முறையே குறிப்பிடுக (புள்ளிகள் 3)

ii. குரூ மக்கலம் சீர்திருத்தத்தின் முக்கிய அம்சங்கள் இரண்டினைக் குறிப்பிடுக? (புள்ளிகள் 4)

iii. டொனமூர் அரசியல் யாப்பில் அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டு புதிய அம்சங்களைக் குறிப்பிட்டு விளக்குக? (புள்ளிகள் 5)

iv. 1978 அரசியல் யாப்பின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட தேர்தல் முறைகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக (புள்ளிகள் 6)

# பகுதி - III

8) i. கைத்தொழிற் புரட்சி ஏற்பட்ட பிரதான மூன்று துறைகளையும் குறிப்பிடுக? (புள்ளிகள் 3)

ii. பத்தொன்பதாம் நூற்றாண்டில் கைத்தொழிற் புரட்சியானது வேறு நாடுகளில் பரவுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணங்கள் இரண்டைக் குறிப்பிடுக? (புள்ளிகள் 4)

iii. கைத்தொழிற் புரட்சி பரவலடைந்த வேறு துறைகள் இரண்டினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக? (புள்ளிகள் 5)

iv. கைத்தொழில் புரட்சியானது இலங்கை மீது செல்வாக்குச் செலுத்திய விதத்தினை மூன்று காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக? (புள்ளிகள் 6)

9) i. முதலாம் உலக மகா யுத்தத்தின் பின் ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற சுதந்திர அரசுகள் மூன்றினைக் குறிப்பிடுக? (புள்ளிகள் 3)

ii. கீழே A-D வரை தரப்பட்டுள்ள தகவல்களுக்குப் பொருத்தமான விடைகளை அடைப்புக்குள்ளிருந்து தெரிந்து எழுதுக?

A- சமூக ஒப்பந்தம் என்ற நூலின் மூலம் மக்கள் இறைமை தொடர்பான எண்ணக்கருவை முன்வைத்தவர்.

B- சர்வதேச சங்கம் தோற்றம் பெறுவதில் முன்னோடியாக விளங்கிய ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி

C- இத்தாலியில் முசோலினியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசியல் கொள்கை


D- சுயெஸ் கால்வாயை மக்கள் மயப்படுத்திய எகிப்திய ஜனாதிபதி


(மொன்டஸ்கியூ, வூட்ரோ வில்சன், நாசிச வாதம், பாசிச வாதம், அப்துல் கமால் நசார், பிராங்ளின் ரூஸ்வெல்ட், ரூஸோ) (புள்ளிகள் 4)

iii. சர்வதேச சங்கம் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக? (புள்ளிகள் 5)

iv. தற்கால உலகில் சமாதானத்தைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக (புள்ளிகள் 6)

*****




N
Indian Ocean
Africa